24—

அங்கன்வாடி மையம்

***7147—திரு. சி. ராஜா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், நடுவனேரி ஊராட்சி, ஆலங்காட்டானூரில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி சட்டமன்றத் தொகுதி, மகுடஞ்சாவடி வட்டாரம், நடுவனேரி கிராம ஊராட்சியில், புல எண் 222/20-ல் நிலம் தேர்வு செய்யப்பட்டு, 2017–2018 ஆம் ஆண்டில், அதாவது இந்த நிதியாண்டிலேயே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் புதிய அங்கன்வாடி மையம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள்.*

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். சங்கரி சட்டமன்றத் தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், நடுவனேரி ஊராட்சி, ஆலங்காட்டானூரில் புதிய அங்கன்வாடி மையத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைத்துத் தரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன்.*

2017 ஜூன் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.*

திருமதி கு. உமா மகேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் எங்கள் குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்திற்கு எண்ணற்ற சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி, ஒரு புரட்சியை ஏற்படுத்தினார்கள். தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, பாரதியார் பிறந்த மண்ணான எட்டயபுரத்தில் 3 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை மூன்றுமே வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அம்மையங்கள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில், தமிழகத்தில் 54,439 அங்கன்வாடி மையங்கள் உள்ளன. அவற்றில் 45,712 அங்கன்வாடி மையங்கள் அரசு கட்டடத்திலும், 8,727 அங்கன்வாடி மையங்கள் வாடகை மற்றும் வாடகையில்லாத கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, தேவையின் அடிப்படையில் அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கு இடம் தெரிவு செய்யப்பட்டு,* administrative sanction *கொடுக்கப்படும் இடங்களில் நிதியொதுக்கீடு செய்து அங்கன்வாடி மையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–35

அங்கன்வாடி மையங்கள் அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், மாவட்ட ஆட்சித் தலைவருடைய discretionary fund*–லிருந்தும் நிதியை ஒதுக்கலாம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து எந்தெந்த பகுதிகளில் நீங்கள் ஒதுக்கீடு செய்ய முடியுமோ அங்கெல்லாம் ஒதுக்கீடு செய்யலாம் என்பதை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு குழந்தைகளினுடைய நலன் காக்கும் அரசு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட அந்தக் கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***850—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *எழும்பூர் தொகுதி, 77–வது வார்டு, கேசவபிள்ளை பூங்காவிலுள்ள தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*